IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
RLTOP.No.1/2022
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.45p.m.

எ.ம. சா. 1 சாட்சி ஆண்டவர்புத்திரன் த.பெ.அய்யாத்துரைபிள்ளை

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 05.03.2026 in accordance with the provisions of Act XX141.**

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. இம்மனுவின் விபரங்கள் மற்றும் மனு ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனுச்சொத்து மனுதாரருக்கு தானஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மனுச்சொத்தின் மொத்த கட்டிடத்தில் கீழ்தளத்தில் 2கடைகளும், 1வீடும் உள்ளது என்றால் சரிதான். முதல்தளத்தில் 1வீடு உள்ளது என்றால் சரிதான்.

2. கீழ்தளத்தில் உள்ள 2கடைகளையும் மனுதாரர் வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் எனது கடைக்கு வாடகை கிடையாது ஒத்திபாத்தியம் ஆகும். மனுதாரர் வழக்கானது வழக்குச்சொத்தை எனக்கு வாடகைக்கு விட்டுள்ளதாகவும், எனது எதிர்வாதமானது வாடகைக்கு விடவில்லை என்றும், ஒத்தியாக விடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

3. நான் கூறுவது போன்று ஒத்தி எப்போது ஏற்பட்டது என்றால் 2016 ஆகும். தேதி, மாதம் தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் தெரியும். மேற்படி ஒத்தி ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம்தான் உள்ளது. மேற்படி ஒத்தி ஆவணத்தில் ஒத்திக்கான காலம் மற்றும் தொகை விபரங்கள் என்ன என்றால் ஒத்திக்காலம் 2ஆண்டுகளும், ஒத்திதொகை ரூ.7லட்சமும் ஆகும்.

4. ஒத்தியானது 2வருடகாலங்கள் ஏற்பட்ட நிலையில் 1வருடகாலத்தில் மனுதாரர் ஒத்திதொகை ரூ.7இலட்சத்தை என்னிடம் திருப்பி செலுத்தி அதனை செல்அடித்து அசல் ஆவணத்தை திருப்பி கேட்டார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை திருப்பி தருவதாக கூறிவிட்டு 17.8.2019 முதல் வாடகைதாரராக இருந்து வருவதற்கு மனுதாரரிடம் கேட்டு அதன்படி எனக்கும், மனுதாரருக்கும் 17.8.2019ல் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

5. வழக்குச் சொத்தை பொறுத்த வாடகை ஒப்பந்தம் ம.சா.ஆ.2 என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்திற்கு நான் ரூ.7இலட்சம் முன்பணமாக கொடுத்து மாதவாடகை ரூ.3ஆயிரம் என ஒப்புக்கொண்டு ம.சா.ஆ.2ஐ ஏற்படுத்திவிட்டு வழக்கிற்காக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. எனது கூற்றுப்படி ஒத்திக்காலமான 2ஆண்டுகள் 2018ல் முடிவடைந்த பிறகு மேற்படி ஒத்திதொகையான ரூ.7இலட்சத்தை கேட்டு எழுத்துப்பூர்வமாக அறிவிப்பு அனுப்பினேனா என்றால் மனுதாரரிடம்

வாய்மொழியாக கேட்டேன், எனினும் மனுதாரர் எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லை. ஒத்தி முன்பணத்தை திரும்ப தரவேண்டி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

7. நான் கூறுவது போன்று ஒத்தியானது முடிவடைந்து விட்டது என்றும், அதற்கு பின்னிட்டு மாதவாடகை ரூ.3ஆயிரத்துக்கு ஒப்புக்கொண்டு வாடகைதாரராக இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல, ஒத்திதாரராக இருந்து வருகிறேன். மனுச்சொத்தானது நகரின் முக்கிய பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. நகரின் சந்தை பகுதியில் மனுச்சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான்.

8. மனுச்சொத்தில் நான் வெற்றிலை, பாக்கு, தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மனுச்சொத்திற்கு மின்கட்டணம் செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். ஆகஸ்ட் 2019மாதத்திற்கு மட்டும்தான் நான் வாடகை செலுத்தினேன் என்றாலும் அதற்கு பின்னிட்டு செப்டம்பர் 2019லிருந்து இன்றுவரை வாடகை செலுத்தவில்லை என்றால் சரியல்ல, நான் ஒத்திக்குத்தான் இருந்து வருகிறேன்.

9. மனு தாக்கல் செய்த 2021 மே மாதம் வரை 21 மாதங்களுக்கு வாடகை பாக்கி செலுத்தாமல் இருந்து வருகிறேன் என்றாலும், அதற்கு பின்னிட்டு வாடகை செலுத்தாமல் இருந்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் வெற்றிலை, பாக்கு, தேங்காய் வியாபாரம் செய்வதை நிறுத்திவிட்டு காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன் என்றும், அது வாடகை ஒப்பந்தத்திற்கு முரணானது என்றாலும் சரியல்ல.

10. ம.சா.ஆ.3ஆனது மனுச்சொத்தில் நான் வியாபாரம் செய்யக்கூடியதை காட்டக்கூடிய புகைப்படம் என்றால் சரிதான். மனுச் சொத்தில் நான் காய்கறி வியாபாரம் செய்ததாலும், வாடகை செலுத்தாததாலும் மனுதாரர் என்னை மனுச்சொத்திலிருந்து காலிசெய்யவேண்டி ம.சா.ஆ.4 அறிவிப்பை அனுப்பினார் என்றாலும் அதற்கு நான் ம.சா.ஆ.5 பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றாலும் சரிதான். மேற்படி ம.சா.ஆ.5 பதில் அறிவிப்பில் சட்டப்படி வாடகை நிர்ணயம் செய்யும் நிலையில் வாடகை செலுத்த தயாராக உள்ளேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ம.சா.ஆ.5ல் அவ்வாறு உள்ளது ஆனால் நான் அவ்வாறு சொல்லவில்லை.

11. எனது பதில் அறிவிப்பான ம.சா.ஆ.5ல் மனுதாரருக்கும், எனக்கும் நிலச்சுவான்தாரர், வாடகைதாரர் உறவு உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒத்தியானது ஊர்ஜிதத்தில் இருந்திருந்தால் நான் சட்டநடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும், அவ்வாறு ஒத்தி இல்லை என்பதாலேயே நான் சட்டநடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

12. நான் வாடகை செலுத்தாமல் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணதில் மனுச்சொத்தில் வியாபாரம் செய்து சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. கடந்த 21 மாதங்களாக வாடகை செலுத்தாததால் எனது வாடகை ஒப்பந்தமானது இரத்து செய்யப்பட்டுவிட்டது என்றாலும், அதனால் நான் மனுச்சொத்தில் இருந்து சட்டப்படி காலிசெய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. மனுதாரரின் மனுப்பரிகாரம் மனுவுக்கு கிடைக்கக்கூடியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.10 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.05 16:03:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.